# தமிழ்நாடுகால்நடைமருத்துவஅறிவியல் பல்கலைக்கழகம்
# TAMIL NADU VETERINARY AND ANIMAL SCIENCES UNIVERSITY
## விரிவாக்கக் கல்வி இயக்ககம்
## Directorate of Extension Education

*கால்நடை வளர்ப்போருக்கான வழிகாட்டி அறிக்கை*

***Livestock Farmers Advisory Bulletin***

*வடகிழக்கு பருவமழை கால வழிகாட்டி அறிக்கை*

***North Eastern Monsoon Advisory Bulletin***

### கால்நடை வளர்ப்போர் வடகிழக்கு பருவமழை காலங்களில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் முக்கிய பருவமழை காலமான வடகிழக்கு பருவமழையானது (அக்டோபர் - டிசம்பர்) புயல்கள், தொடர் மழை மற்றும் வெள்ளம் ஆகியவற்றை ஏற்படுத்தக்கூடியது என்பதால் கால்நடைகளைப் பராமரிப்பதற்கு கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு எல்-நினோ தாக்கத்தில் இருப்பதால் மேலும் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.

### பருவமழைக்கு முன் தயார் நிலை (Preparedness)

### தொழுவம் / கொட்டகை / கட்டுத்தரை தயார் செய்தல்

1. மழை காலங்களில் கால்நடைகளை மேடான இடத்திலுள்ள தொழுவம் கட்டுத்தரைகளில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து மேடான இடங்களில் பராமரிக்க வேண்டும்.
2. தாழ்நிலை கொட்டகைகளை கூடுதல் மண் அடித்து தரையை உயர்த்தி மழைநீர், சாணம், சேறு போன்றவை தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. கொட்டகையின் கூரையில் ஓட்டைகள் / விரிசல்கள் ஏதாவது இருந்தால் அவற்றைச் சரி செய்ய வேண்டும்.
4. போதுமான காற்றோட்டம் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் புயல் காற்றுகளில் கூரை மற்றும் கொட்டகை சேதமடையாமல் இருக்கும்படி பாதுகாப்பு செய்ய வேண்டும்.
5. கடுங்குளிர் காலங்களில் குளிரிலிருந்து பாதுகாக்க வேண்டும்.
6. மழைநீர், சாரல் நேரடியாக கால்நடைகளின் மேல்படாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். (திரை / மறைப்பு அமைத்து)
7. மின்வசதி இருப்பின் வெளிச்சம் கிடைக்க ஏற்பாடு செய்யவும். அவ்வாறு மழை காலங்களில் மின்வசதி இல்லையென்றால் மாற்று ஏற்பாடு செய்து அவசர காலங்களில் வெளிச்சம் பெறுவதற்கு டார்ச் லைட் / பேட்டரியில் இயங்கும் விளக்குகளை தயார் செய்து வைக்க வேண்டும்.

8. தொழுவம் / கொட்டகை சுற்றி மழைநீர் வடிகால் அமைத்து மழைநீர் உடனடியாக வெளியேறும்படி செய்ய வேண்டும். அடிக்கடி பிளீச்சிங் பவுடர் போன்ற கிருமி நாசினிகளை உபயோகித்து வருவது நல்லது.
9. கொசுக்கள், பூச்சுகள், சிறு ஊர்வன போன்றவை இல்லாமல் பார்த்துக்க கொள்ள வேண்டும்.

## மழைக்கால தீவனம் மற்றும் குடிநீர் மேலாண்மை

10. உலர்ந்த வைக்கோல், சோளத்தட்டை, மக்காசோள தட்டை, கடலைக்கொடி போர் போன்ற தீவன சேகரிப்புகளை நேரடியாக மழையில் நனைந்து விடாமல் இருக்கும்படி மேடான இடத்தில் சேகரிப்பு வசதி செய்து தகரம் அல்லது தார்பாயினைப் பயன்படுத்தி மூடி வைக்க வேண்டும்.
11. பருவ மழை காலங்களில் மேய்சசலுக்குபோகும் நேரம் குறைவாக இருப்பதற்கு வாய்ப்பு இருப்பதால், குறைந்தது 2-3 மாத தீவனத் தேவைக்கான உலர் தீவனத்தை முன்கூட்டியே சேமித்து வைக்க வேண்டும்.
12. ஈரப்பதம் அதிகரிப்பினால் பூஞ்சான நச்சு ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே உலர் தீவனம் மற்றும் கலப்புத் தீவனத்தை பாதுகாப்பாக சேமித்து வைக்க வேண்டும்.
13. குடிநீர் தொட்டிகளை முறையாகச் சுத்தம் செய்து மழைநீர் மற்றும் அசுத்த நீர் கலந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## மருத்துவ தயார் நிலை

14. கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி மழைக்கு முன் கூட்டியே கோமாரி நோய், நீல நாக்கு நோய் மற்றும் PPR, துள்ளுமாரி ஆகிய நோய்களுக்கு தடுப்பூசி போட வேண்டும்.
15. பருவ மழைக்கு முன்பாக இளங்கன்றுகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுக்க வேண்டும்.
16. வயிற்று போக்கு, காய்ச்சல் மற்றும் வயிறு உப்புசம் நோய்களுக்குத் தேவையான மருந்துகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனைப்படி முன்கூட்டியே வாங்கி வைத்து முதலுதவிப் பெட்டி தயார் செய்து வைக்க வேண்டும்.

## பொதுவான ஆலோசனைகள்

17. அவசர கால தொடர்பு எண்கள், கால்நடை மருத்துவர், தீயணைப்பு துறை, கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரது எண்கள் வைத்திருக்க வேண்டும்.
18. கால்நடை காப்பீடு செய்து, ஆவணங்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும்.

மேலும் தகவல்கள் பெற விரும்பினால் தங்களது மாவட்டத்திலோ, அருகாமையிலோ உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களை அணுகி ஆலோசனை பெற்று பயன் பெற கேட்டுக் கொள்கிறோம்.

**மழை காலங்களில் கால்நடைகளை பாதுகாப்போம் !**
**கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுப்போம் !!**
**நம் வாழ்வாதாரத்தை நாம் காப்போம் !!!**